
விலை 30/=
ISSN-2613-828X

# யாழ் களரி

வெளியீடு: ராகஸ்வரம் கலைமன்றம்
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
077-6510375
www.yarlgallery.com
yarlgallery@gmail.com

உதயம்: 03 | ஆடி - ஆவணி 2020 | களரி: 21










நீ உருவாகி பிறரை உருவாக்கு


பாராளுமன்ற தேர்தல் 2020
தமிழரசின்
ஒரேயொரு
இளம் வேட்பாளர்
பொங்கு தமிழ்
நாயகன்
யாழ். மாநகர
முதல்வர்
X
உங்கள் தெரிவு
இமானுவேல் ஆனோல்ட்
வெற்றி இலக்கம் 2


கசப்பான அரசியலில் உண்மையான மனிதன்
9
ஸ்ரீகந்தநேசன்
(புயல்)
யாழிலிருந்து பாராளுமன்றத்திற்கு
தேசிய மக்கள் சக்தி
ජාතික ජන බලවේගය
National People's Power
X
மக்களுக்குப் பொறுப்புக் கூறும் மக்கள் சக்தியை உருவாக்குவோம்

# யாழ் களரி

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375

ஆடி - ஆவணி

ROOMS A/C, Non A/C
விருந்தினர் விடுதி
மங்களகரமான
நிகழ்வுகளுக்கான மண்டபம்
இல.261/2, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0762963944

## “பிரபாகரன் வழியில் கூட்டமைப்பினர் சமஸ்டி, தன்னாட்சிக்கு இடமேயில்லை”

- மஹிந்த -



பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகள் சமஷ்டி கேட்டார்கள், தன்னாட்சி கேட்டார்கள், தமிழீழம் கேட்டார்கள், தனிநாடு கேட்டார்கள், இதையே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினரும் ஒவ்வொன்று ஒவ்வொன்றாகக் கேட்டு வருகிறார்கள். எமது ஆட்சியில் இவை தொடர்பான பேச்சுக்கே இடமில்லை.விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுதத்தால் பெற முயற்சித்த நாட்டை பேனாவால் எடுதிக் கொடுக்க நாங்கள் தயார் இல்லை" என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

"விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுதத்தால் பெற முயற்சித்த நாட்டை பேனாவால் எழுதிக் கொடுக்க நாங்கள் தயாரில்லை" என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவ்வரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



### ஒக்ஸ்போர்ட் கொரோனோ தடுப்பூசி நம்பிக்கை தரும் சோதனை முடிவுகள்



ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் உருவாக்கிய கொரோனா தடுப்பூசி மனிதர்களின் உடலில் பாரிய பக்க விளைவுகளை ஏற்படுத்தாது, கொரோனா வைரஸ்சிற்கு எதிரான நோயெதிர்ப்பு மண்டலத்தைத் தூண்டுகிறது என அதன் முதல் சுற்று மனிதப் பரிசோதனையின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுயநிர்ணய உரிமைகள் மறுக்கப்பட்டால் விளைவுகள் பாரதூரமாக அமையலாம்



இலங்கை அரசின் சம்மதத்துடன் ஐ.நா சபையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் குடியியல் உரிமைகளின் அடிப்படையிலும், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளின் அடிப்படையிலும் ஒரு மக்கள் குழாமிற்கு உள்ளக சுயநிர்ணய உரித்து உள்ளது. இவற்றை நிறைவேற்ற வேண்டியது இலங்கை நாட்டினதும், அரசாங்கத்தினதும் கடமை. இவை மறுக்கப்படுகின்றபோது. விளைவுகள் பாரதூரமாக அமையலாம் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தெரிவித்துள்ளார்.

### மாற்றுக்கருத்தும் மாற்றுக் கொள்கைகளும் எங்களிடமே உண்டு.



ஈ.பி.டி.பி மட்டுமே மாற்றுக்கருத்துக்களுடனும், மாற்றுக் கொள்கைகளுடனும் இருப்பதாகக் கூறியிருக்கும் அக்கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றைய கட்சிகள் மக்களை உசுப்பேத்தும் அரசியலையே செய்வதாகக் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

வவுனியாவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் வரலாற்று விடயங்களைத் தீர்ப்பதாக தெரிவித்து அதனை விட பல மடங்கு பிரச்சினைகளை கடந்த கால தலைமைகள் எமது மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதிலிருந்து மக்களை விடுவித்து இருப்பதைப் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கி செல்வதே எனது எண்ணம் அதன ஒரு மாற்றுக் கொள்கையாகவும், பொறிமுறையாகவும் முன்வைத்திருக்கிறேன் என்றார். கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியில் சிறுபான்மை சார்ந்தோர் இல்லை என்று குற்றச்சாட்டு வந்திருக்கிறது. தற்போது எனது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அதில் சிறுபான்மையினரை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

## யாழ்பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் இராஜினாமா செய்யும் அளவுக்கு வடக்கில் இராணுவ அழுத்தம்



அநீதிகளுக்கு எதிராகப் போராடும் ஆற்றலை பல்கலைக்கழக சமூகம் இழந்தமைக்கு கூட்டமைப்பே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

யாழ்பல்கலைக்கழக உபவேந்தராகப் பதவி வகித்த ரட்ணம் விக்னேஸ்வரனின் பதவி விலகலுக்குப் பின்னாலும் இராணுவத்தினரின் கை ஓங்கியிருந்தது.

### நேரடி விவாதத்துக்கு தயாரா?





எமது கட்சியின் சட்ட ஆலோசகர்களுடன் நேரடி விவாதத்திற்கு வருவதற்கு அஞ்சிய சுமந்திரன் யாழ்ப்பாணத்திலல் இருந்து ஓடிச் சென்று கிளிநொச்சியில் ஒளிந்து கொண்டார் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். கொக்குவில் தலையாழிப் பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் இருந்து இவ்வாறு கூறினார்.

### பெண் வேட்பாளருக்கு வாக்களியுங்கள்



சகல கட்சி பெண் வேட்பாளர்களும் ஒன்று கூடி பெண் வேட்பாளருக்கு உங்கள் விருப்பு வாக்குகள் ஒன்றைத் தாருங்கள் நீங்கள் எந்த கட்சியாகிலும் அதிலுள்ள பெண் வேட்பாளரை ஊக்கப்படுத்தி பெண்களின் குரலை நாடாளுமன்றில் ஒலிக்க வழிசெய்யுங்கள் என்றார்கள்.

பெண்களின் பிரச்சனைகளை பெண்கள் தான் புரிந்து குரல் எழுப்ப முடியும். தெரிவு செய்யப்படும் பெண் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் செல்லும்போது கட்சி, குழுக்கள் பேதமின்றி பெண்களுக்காக ஒன்றுபட்டுக் குரல் கொடுக்க தீர்மானம் எடுப்போம். தரமான திறமை வாய்ந்த குரல் கொடுக்கும் தகுதியானவர்களே பெண்வேட்பாளர்கள். உங்கள் ஒரு வாக்கை பெண்களின் தெரிவுக்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.

## சோபித்த ஒரு
# சமூகமான கலந்துரையாடல்

-கலாபூஷணம் கே.எஸ் சிவஞானராஜா -



இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன், யாழ்ப்பாண மனித உரிமைகள் முதலுதவி நிலையத்தினால், சமூக மட்டத்தலைவர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வு அண்மையில் (30.11.2019) ஞானம்ஸ் விடுதி அரங்கில் பெறுமதியோடு நடைபெற்றது.


நாட்டின் பல பாகங்களில் இருந்தும் எண்பத்துநான்கு சமூகமட்ட தலைவர்கள் பங்குபற்றிச் சிறப்பித்தனர். ஐரோப்பிய யூனியன் (This Project is Funded by the Europeon Union) இதற்கு ஆதரவு நல்கியது. பெண்கள், இளைஞர்கள், அறிஞர்கள், சமயப் பெரியார்கள், ஆலய நிர்வாகிகள், சமூக சேவையாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். முக்கியமாக நான்கு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டன. அவையாவன,

1) காணாமல் போனோருக்கான அலுவலகம் (Office On Missing Persins) தொடர்பான கேள்விகளும், விளக்கங்களும், பதில்களும் தொடர்பானது.
2) இலங்கை மனித உரிமைகள் முதலுதவிச் சங்கம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பற்றியது.
3) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மூலம் மக்களுக்கான பயன்பாடு
4) தகவல்களை அறிவதற்கான உரிமையும், அதனை அணுகும் முறையும், தொடர்பான விளக்கம் சார்பானது.

சட்டத்தரணி விஜயகாந்தன், திரு.க.வேந்தன், செல்வி ஜமுனா, திரு.நிஷாந்தன், திரு.சுதர்சன் அவர்களோடு அவர்களின் உதவியாளர்களும்.

இந்தக் கலந்துரையாடலுக்கு முழுவடிவமும் கருத்துரைகளும் வழங்கினர். இது நடைபெற்ற மூன்றரை மணித்தியாலமும் வருகை தந்தோருக்குப் பிரயோசனமாகவும், பரிகாரமாகவும் அமைந்து காணப்பட்டது.

காணாமல் போனவர்களும், காணாமல் ஆக்கப்பட்டவர்களும் எனப் பல தசாப்தங்களாகத் தமது உறவுகள் பற்றியும், அவரவர் தலைவிதி பற்றியும், அறியாத நிலையில் பல குடும்பங்கள் வருந்துகின்ற நிலையில் தமது பொறுப்புக்களையும், நியாயத்தையும்; நீதியையும், சம்பந்தப்பட்ட நபர்களையும் அணுகுவதற்கும், அடையாளம் காண்பதற்கும், வெளிக்கொணர்வதற்கும் ஏற்ற ஒரு பொறிமுறையை வழங்குவதாக இந்த காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) இயங்கி வருகிறது. மேலும் இந்த அலுவலகம் மேற்படி குடும்பங்களின் மன உளைச்சல், மனக் காயங்கள் என்பவற்றைத் தீர்ப்பதற்கும், குறித்த பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் உறுதி பூண்டுள்ளது.



1983-2009 காலப்பகுதியில் இடம் பெற்ற போரிலும், கிளர்ச்சிகளின் போதும், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போதும் காணாமல் போன ஆக்கள் பற்றிய தகவல் கவனத்தில் எடுக்கப்பட்டு அதன் எல்லை வரையும் சென்று சம்பந்தப்பட்ட செய்திகளை வெளிச்சத்துக்கு ஓ.எம்.பி அலுவலகம் கொண்டு வருவதற்கு ஆவன புரியும்.

குடும்பங்கள், பாதிக்கப்பட்டவர்களின் இலகுவான அணுகுதலை உறுதிப்படுத்தும் வகையில் பிராந்திய அலுவலகங்கள் மூலமாக, உரிய சாட்சியங்களை வரவழைக்க முடியும், ஆவணங்களைக் கோரமுடியும், தடுப்பு நிலையங்களைத் தரிசிக்கவும் முடியும். சந்தேகத்திற்கிடமான புதைகுழிகள் கண்டறியப்பட்டால், அதனைத் தோண்டுவதற்கான கட்டளையை நீதிமன்றம் மூலம் பெறுவதற்கு உரித்தும் இதற்கு (ஓ.எம்.பி) உண்டு. சாட்சி(கள்) வழங்குவதற்காக அலுவலகம் முன் தோன்ற வேண்டிய அவசியம் இல்லை. வீடியோ அல்லது எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ள ஆவன செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறப்படும்போது புலனாய்வும், வழிகாட்டுதலூடாகப் பொறுப்புக் கூறலும், அறிவூட்டலும், சட்டரீதியாக நடவடிக்கைக்குச் சிபார்சு செய்தலும்,

மேலும் தேசியரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளைச் செயற்படுத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூலம் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

முறைப்பாடுகள் எந்தவொரு மொழியிலும் வழங்க முடியும். இதே வேளை மனித உரிமைகளைக் கௌரவிக்கவும், பாதுகாக்கவும் பாரபட்சமின்றி நடப்பதும், குற்றங்களைத் தடுப்பதும் முறைப்'பாடுகளைத் துரிதமாக விசாரிப்பதும் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறுவதும் பொலீசாரின் பாரிய பொறுப்பாகும். இவர்களின் பணி நூற்றுக்கு நூறுவீதம் தூயதாக அமையுமாயின் கடவுளின் தரிசனம் இலங்கையில் எல்லோருக்கும் கிடைத்தே தீரும். பொதுமக்களுக்கான பாதுகாப்புக்குப் பொறுப்புக் கூறுபவர்களாக வெளிப்படைத்தன்மை வாய்ந்தவர்களாக அதே வேளை மொழிப்பிரச்சனையில் ஏற்படும் சங்கடங்க ளைத் தீர்ப்பவர்களாக மும்மொழி வல்லுநர்களாக பொலிஸ் திணைக்கம் இருக்கும் பட்சத்தில் நாடு சுமூகமாக எழில் பெறும். மொழிப்பிரச்சனையால் தமிழ் மக்கள் தோற்றுப் போகிறார்கள். இதற்கான பரிகாரம் அவசரமாக மேற்கொள்ள வேண்டும்.

**தகவல்களை அறிவதற்கான உரிமை**

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்கள் தொடர்பான குறிப்புக்கள், ஆவணங்கள், மனுக்கள், மின்னஞ்சல்கள், ஆலோசனைகள், ஊடக அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள், கட்டளைகள், சம்பவத்திரட்டுப் புத்தகங்கள், உடன்படிக்கைகள், அறிக்கைகள், செய்திப்பத்திரிகைகள், மாதிரிகள், எடுத்துக்காட்டுக்கள், பரிமாறப்படும் கடிதங்கள், சட்ட வரைபுகள், நூல்கள், வரைபடங்கள், ஓவியங்கள், உருவக்குறிப்புக்கள், நிழற்படங்கள், தேசப்படங்கள், ஒலிப்பதிவு நாடாக்களய், வீடியோ நாடாக்கள், பொறிமுறை அறிக்கைகள், கணினி அறிக்கைகள், ஆவணப் பொருட்கள் போன்ற அனைத்துத் தகவல்களையும் அறிந்து கொள்வதற்கும், பெறுவதற்கும் தகவல் உரிமைச் சட்டம் பொதுமக்களுக்கு வரமாகிறது.

நிறைவாக,

மேற்படி கலந்துரையாடலானது கருத்துப் பகிர்வுக்கும், மனித உரிமைகளை உள்வாங்குவதற்கும், தொடர்பாடலை மேம்படுத்துவதற்கும் இலங்கை தேசிய சமாதானப்பேரவையுடன், மனித உரிமைகளக்கான முதலுதவி நிலையமும், அதீத சிரத்தை எடுத்திருப்பது வரவேற்கத் தக்கது. இது மக்களைச் சென்றடைய வேண்டும்

---



# கலை வளம் பாதுகாக்க உண்மைக்கலைஞர்களே முன் வாருங்கள்

சிந்தனையில் சிறந்தது போலவே செயலினும் சிறந்து விளங்கு. உன் சொல்லுக்கு ஏற்பச் செயலையும், செயலுக்கேற்ப சொல்லையும் அமைத்துக் கொள் என்பார் வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற அறிஞர். சிறந்த கலைஞர்களுக்கு சிந்தனை வளம் மேம்படுவதால் அவர்களால் விழிப்பூட்டும் சூழல் உருவாக வாய்ப்புக்கள் உண்டு அச்சிந்தனைகள் செயல்வடிவமாகும்போது புதிய கலைவளம் கொண்ட கலைஞர்களை உருவாக்க முடியும். இன்றைய கலைஞர்கள் தமது வாரீசுகளாக புதிய கலைஞர்களை உருவாக்குவதே எதிர்கால சந்ததிகள் கலைரசனை உடையவர்களாக, சிந்தனைத்திறன் மிக்க சிறந்த ஆளுமையுள்ள சமூக வழிகாட்டிகளாக உருவாக்க முடியும். இதற்கு அர்ப்பணிக்கும் கலைஞர்களுக்கு உள்ள தூரநோக்கு சிறந்த செயலால் வெளிப்பட வாய்ப்புண்டு. அதுவே சொல்லும் செயலும் ஒன்றாய் இன்றைய காலத்தில் கலைஞர்களின் பொறுப்புள்ள கடமையாகும்.

இன்று எமது நாட்டில் கலைஞர்களுக்கு வறுமை தோன்றி உள்ளது. கலைவளம் குன்றுவது கலைஞர்கள் மட்டில் கலைஊககப்படுத்தலின்றி ஒதுங்குவதும், ஒதுக்கப்படுவதும் சுயநலம், போலி பாராட்டுக்களால் மயக்கமுற்று கலையார்வம் இன்றி அரங்குகள் வெறிச்சோடி இருப்பதால் பொறுப்புள்ள கலைஞர்கள் முக்கிய கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். அதுவே பணம் கொடுத்து வேண்டும் பட்டங்களாகவும் விலை போவதால் உண்மைக் கலைஞர்கள் ஓரம் கட்டப்படுகிறார்கள்.

போலிகளே வேலிகளாகி எந்த வித கலைகளிலும் ஈடுபடாதவர்கள் கலைஞர்களாகத் தம்மை வெளிப்படுத்தி பரிசுகள், பாராட்டுக்கள் பெற முனைவதும் அதற்குத் தூண்டப்படும் அரச மட்ட நிர்வாகிகளும் இடம் நிரப்பி கடமைம முடிந்தது என செயல்ப்படுவதும் உண்மைக்கலைஞர்கள் ஒதுக்கப்படுவதும் போலிகளே தெரிவுக் குழுக்களில் இருந்து மதிப்பிட முனைவதும் உண்மைக் கலைஞர்களின் வெறுப்பு வெளிப்பாடுகளை இனம் காண முடியாமைக்குக் காரணமாகும்.



துறைசார்ந்த கலைஞர்கள் இன்று இயங்கிக் கொண்டு இருப்பவர்களால் தான் கலைவளத்தைப் பாதுகாக்கவும்,

( தொடர்ச்சி 9ம் பக்கம்)

## யாழ் களரி

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375

பிரதம ஆசிரியர்: ஜோர்ச் ஜெஸ்ரின் |
பொறுப்பாசிரியர்கள்: வே.சஞ்சீவதனுசன் | செ.யோசப்பாலா
வெளியீடு மற்றும் தொடர்பு முகவரி: ராகஸ்வரம் கலைமன்றம் |
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1 A.V வீதி, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.


## "எல்லாம் கடந்து போகும்"

மக்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டு நாடாளுமன்றம் செல்லும் வடகிழக்கு மாகாண தமிழ்பிரதிநிதிகளே, உங்கள் கடந்த காலம் எதுவாக இருந்தாலும் எமக்குள்ள தூரநோக்கு ஒன்றாக செயல்பட திடசங்கற்பம் எடுங்கள்.

எல்லோரின் எதிர்பார்ப்பும் தூரநோக்கும் தமிழன் தலைநிமிர்ந்து வாழ தன்மானத்துடன் வாழ சுயமரியாதையுடன் வாழும் தனித்துவத்தை நிலைநாட்ட வேண்டிய பொறுப்புக்களையேற்று மக்கள் பிரதிநிதியாகச் செல்லும் சிறப்பை தமிழினத்தின் விடிவுக்காக அரசியல், பொருளாதார, சமூக விடுதலையை உங்கள் சொல், செயல், வாழ்வால் முன்மாதிரியாக வெளிப்படுத்தி நாகரீகமான சமூகத்தின் பிரதிநிதிகளாக குரல் கொடுங்கள்.

உள்ளூர் முரண்பாடான கருத்து மோதல் சமய, சமூக, பிரதேச பாகுபாடுகளை பொதுவெளியில் ஒருவர் மற்றவர்கள் மீது தூற்றி எமக்குள்ளேயே முரண்படாது நாகரீகமான முறையில் நட்புறவை பேணி தமிழினத்தின் கௌரவ பிரசைகளின் பிரதிநிதிகளாக எதிரிகளையும் நாகரீகமான முறையில் நட்புறவால் கருத்துக்களை கருத்துக்களால் வெளிப்படுத்தி இன விடுதலைக்காக இளையோர் எதிர்காலத்துக்காக வலிகளில் இருந்து மீண்டு எழும்பி தன்னம்பிக்கையுடன் தன்மானத்துடன் வாழும் உரிமையைக் காப்பாற்றும் மக்கள் சுபீட்சத்துக்காக அர்ப்பணிப்போடு செயல்பட முன்வாருங்கள்.

வெற்றி தோல்விகள் எமக்குத் கற்றுத்தந்த பாடங்கள் அதிகம் அதிலிருந்து மீண்ட வலிமையான பலம் ஒன்றே எமது மூலதனம். எல்லாம் கடந்துபோகும் என்ற தாரக மந்திரம் வாழ்வில் அனுபவித்த வரலாறுடைய தமிழினத்திற்கு போரும், சுனாமியும், இடப்பெயர்வுகளும் எம்மை சிதைத்து விடவில்லை. மீண்டும் எழுவோம் பீனிக்ஸ் பறவைகள் போல என மாற்றங்களை முன்னேற்றத்தின் மூலதனமாக்கி வெல்லும் பாதையில் பயணிப்போம்.

மூத்தோர், இளையோர், வசதி படைத்தோர், ஏழைகள் எவருடனும் பண்பான பணிவான நட்புறவைப் பேணும் நாகரீகத்தை நாடாளுமன்றம் செல்வோரும் தமது பதவிக் காலத்தில் புத்தூக்கம் அளிக்கும் செயல்களால் தன்னம்பிக்கையூட்டுவோராக செயற்பட்டு மக்களின் மனநிலைக்கேற்ப தூரநோக்கை நோக்கி நகரும் வழிகாட்டி யாக, மக்கள் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு செயல்பட எதிர்பார்க்கிறோம்.

எமக்குள்ள முரண்கள் போட்டி மனப்பான்மைகளை அங்கு சென்றும் தொடராது எம்மினத்தின் மானம், மரியாதை, விடுதலை வாழ்வை சுவைக்கும் வழிகளை ஒன்று பட்ட குரலாக ஓங்கி ஒலிக்க முன்வாருங்கள். எல்லாம் கடந்து போகும், நற்செயல்களே நின்று நிலைக்கும்.

## தேர்தலில் வெற்றி யாருக்கு




யாழ்மாவட்டத்தில் 7 ஆசனங்களில் இருந்து மக்கள் பிரதிநிதிகள் தெரிவாக உள்ளனர். அதற்காகப் போட்டியிடுபவர்கள் கட்சிகளும், சுயேச்சை குழுவினரும் இணைந்து 33 குழுக்களாக 330 வேட்பாளர்கள் முன்வந்துள்ளனர். இதில் வெற்றி பெறுவோர் யார்? இவர்கள் ஏம்மண்ணில் என்ன பணிகளில் சமூகத்திற்காக முன்னெடுத்தார்கள்? இவர்கள் யாவரும் மக்களுடன் இணைந்து சேவையாற்றியிருந்தால் கல்வி, சுகாதாரம், சுயதொழிலில் எவ்வளவு முன்னேற்றம் கண்டிருப்பார்கள் எமது மக்கள். எங்கே இருந்தார்கள் இவ்வளவு காலமும் என்பதனைச் சிந்தியுங்கள். இன்றைய தேர்தலில் வெல்லப்போவது யார்? மக்களா? அரசியல் பேசும் வேட்பாளர்களா? எல்லோரும் தாமே வெல்லுவோம் என்ற மனநிலையில் கனவுலகில் சஞ்சரிக்க மக்களின் மனதில் எடுக்கும் தீர்மானங்கள் 6ம் திகதி தெரிந்து விடும். எந்த நிலையிலும் மக்களே அலட்சியப்படுத்தாது தமது வாக்குப் பலத்தை மனசாட்சியுடன் நல்லவர்கள், வல்லவர்கள் நமது நிலைக்காக குரல் கொடுத்து உரிமைக்காகவும், உயர்வுக்காகவும், அமைதிக்காகவும், ஊழலின்றி, சாதி, மத பேதமின்றி உழைப்பவர்களை, தகுதி வாய்ந்தவர்களை எமது பிரதிநிதிகளாகத் தெரிவதில் உங்கள் வாக்குரிமையை பயன்படுத்துங்கள்.

தேர்தல் முடிந்ததும் சுயநலத்துடன் கட்சி மாறுவோரும், தோற்றாலும் பின் கதவால் உள்நுழைவோரும், சுகபோகத்தை அனுபவிப்போரும், காலி நாற்காலிகளாக தமது இருப்பின்றி ஊதியம் பெறுவோரும் சென்ற காலங்களில் எதுவுமே குரல் கொடுக்காது இருந்தவர்களையும் கண்ட எமது மக்கள் தீர்ப்பிடும் உங்கள் வாக்குகள் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு யார் தகுதி வாய்ந்தவர்கள் என்பதை தேர்ந்தெடுக்கும் அரிய சந்தர்ப்பமே உங்கள் வாக்குரிமை, அதனை தீர்ப்பிடும் சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்.

உள்நாட்டு தேர்தலுக்காக உலக நாடுகள், ஐ.நாக்கள் எனக் கூறி வருபவர்கள் முகம் தெரியாத முகவரி இல்லாத பலரும் எமது பிரதிநிதியாக வர முன்வந்துள்ளனர். பெண்களின் பிரதிநிதிகளாக கட்டாயத்தின் பேரில் புதியவர்களை வாடகைக்கு எடுத்தவர்களும், எந்த வித செலவுமின்றி சாதி, சமயம், ஊரார், உறவினர் என்பதனை கூறும் பச்சோந்திகளைக் கண்டு ஏமாறாது தூரநோக்குடன் வாக்களிக்க முன்வாருங்கள். அரசியல் விழிப்புணர்வு இன்றி அலட்சியத்துடன் இருப்போரையும்விழிப்பூட்டி வாக்குரிமைகளால் பதிவிடுங்கள்.

## செயல்களே சாதனைகளாகட்டும்

ஆளும் மாறும், ஆட்சிகள் மாறும் ஆனால் தமிழர் வாழ்வில் நம்பிக்கையான சுதந்திரமான வாழ்வு மலருமா? என்பதே தமிழர் ஏக்கங்களாகும். இதுவரை பல துன்புறும் நிலைகளுக்கு முகம் கொடுத்த மக்களின் வாழ்வியலில் மாற்றமே ஆரோக்கிய சமுதாயத்தை உருவாக்கும். இல்லிடமின்றி அலையும் மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள், தொழில் வாய்ப்புக்காக அலையும் இளை யோருக்கான வேலை வாய்ப்புக்கள், பாதுகாப்புடன் வாழக் கூடிய சூழல், போதை விற்பனையாளர்களால் தவறான பாதையில் செல்லும் இளையோர், கொலை, கொள்ளை மலிந்த எமது நாட்டில் அமைதியாக, சுதந்திரமாக நடமாட முடியாத சிறுவர், பெண்கள் வீட்டிலே கலக்கத்துடன் வாழும் நிலைகள், கைலஞ்சத்தால் சாதிக்கும் சகல மட்ட நிர்வாகக் கட்டமைப்புக்கள், அலட்சியத்துடன் கடத்தப்படும் நிர்வாக கட்டமைப்புக்களால் தேங்கிக் கிடக்கும் வேலைத்திட்டங்கள் தீர்க்கப்படுமா? தீர்வுக்கு வாக்குறுதிகள் தீர்வைத் தருமா? பழிவாங்கும் மனப்பான்மைகளால் தமிழர் எதிர்காலம் பின்னடைவு ஏற்படுமா? எல்லாவற்றிற்கும் பதில் தருமா? இதுவே மக்கள் எதிர்பார்ப்புகள் செயல்களால் வெளிப்படும் சாதனைகளே நிலைக்கும்.

## வென்றாலும் தோற்றாலும் வெற்றி நமதே

தோற்றாலும் வெற்றி தான் வென்றாலும் வெற்றி தான் என்ற மனநிலையுடன் எம் நாட்டில் வேட்பாளர் மனநிலை. இது மக்களுக்கு நம்பிக்கை தர முடியாத ஜனநாயகமாகி விட்டது.

தோற்றவர் பின்கதவால் நியமிக்கப்படலாம், உயர் பதவிகள் பெறலாம், ஒழுங்காக நாடாளுமன்றம் செல்லாமல் சகல வசதிகளையும் அனுபவிக்கலாம் இவை எமது நாட்டின் அரசியல் கலாசாரம்.

நம்பி வாக்களித்த மக்களும், கட்சிகளுமே ஏமாந்த பல நிகழ்வின் அனுபவங்களே. எதுதான் வென்றாலும் விலைபேசிக் கட்சி மாறும் செயல் என்பது இதனால் தான் கட்சியாக இருந்தாலும், சுயேட்சையாக இருந்தாலும் பெயர் கொடுத்து வாக்காளர் பட்டியலில் இடம் பிடித்து பணம் பெறும் வியாபாரம். இதில் மகளீரை நிரப்ப வேண்டுமென்ற கட்டாயத்தில் சேர்க்கப்படுவோர் அடங்குவர். இதுவே நம்ம நாட்டு தேர்தல்

## போதை ஒழிப்புக்கு யாவரும் கைகொடுப்போம்





போரை விட அழிவு போதைப்பாவனையால் ஏற்படும் அழிவுகளைத் தடுக்க முன்வாருங்கள் போதை வியாபாரிகளின் உத்திகளால் பல சிறுவர்கள், இளையோர்களை இலக்கு வைத்து எமது மக்களின் துன்பத்தில் லாபமடைகிறார்கள். இதற்கு உடந்தையா வோர் எமது இளையோர்களே, அவர்கள் உருக்குலைந்து ஊனமுற்றவர்களாகும் சமூகமாக மாறுகிறது இதனால் குடும்பஙகளில் பெற்றோர் படும் துன்பங்கள் வீதியில் இறங்கி உள்ளது. இதனைக் காப்பாற்ற எடுக்கும் முயற்சிகளுக்கு யாவரும் ஒன்றிணைய வேண்டும் என பிரதேச செயலர் திரு.க.சுகந்தன் நம்பிக்கை இல்லத்தை 12.07.2020ல் நாவலர் வீதியில் திறந்து வைத்து உரையாற்றிய போது தெரிவித்தார்.

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அடிகளாரின் முயற்சியில் நம்பிக்கை இல்லம் நாவலர் வீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது தலைமையுரை யாற்றிய அருட்பணி எஸ்.ஜே இம்மானுவேல் அடிகள்,

போதைப்பழக்கம் பல்வேறு வடிவங்களின் முன்னெடுத்து எமது இனத்தை அழித்து வருகிறது. சுயநல போதைகள் பதவிகள், பட்டங்கள் குடும்ப கௌரவ போதைகளைப் பொறுப்புள்ளவர்கள் கவனம் செலுத்தி குடிபோதையால் கோலம் கெட்டு நோயாளர்களாக எம் இளையோர் திசைமாறச் செய்யும் சூழ்ச்சியில் எதிர்கால சந்ததியே இருளில் மூழ்கித் திட்டமிட்டு அழிக்கப்படுகிறார்கள் இதனை மீட்டெடுக்க தனிமனிதர்களால் முடியாது, சகல மட்டத்தினரும் செயல்பட முன் வாருங்கள் என்றார்.

## வாக்குரிமை எமக்கில்லையோ ?



இலங்கையர் எங்களுக்கு வாக்குரிமை தர மாட்டார்களா? இன்றும் இந்தியாவில் நாம் அகதிகளாக, குடியுரிமை அற்ற இலங்கையராகவே இருக்கின்றோம். இந்தியாவில் முகாம்களிலும், பிற குடிமனைகளிலும் வாழ்ந்து வருகிறோம். எமக்கு வாக்குரிமை வழங்க எவரும் கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை.

தேர்தல் திணைக்களம், ஆணைக்குழு, அரசியல் கட்சிகள் இன்றைய நவீன தொடர்பூடாகப் பல வசதிகள் , போக்குவரத்து வசதிகள், இருநாட்டு தூதரகங்கள் , அரச தொடர்புகள் பல இருந்தும் வாக்குரிமை வழங்க யாரும் முன்வராதது ஏன்? இலங்கையர் பற்றி தூதரகங்கள் முயன்றால் முடியாதது என்றுமில்லை.

மனித உரிமைகள் பற்றி அதிகம் பேசுவதோடு நின்று விடாது வாழும் உரிமை சகலரும் அனுபவிக்க பொறுப்புள்ளவர்கள் பொறுப்பேற்க முன்வர வேண்டும். பேச்சளவோடு மறந்து விடாது செயல்படுவதே ஜனநாயக நாட்டின் வெளிப்பாடாகும்.

பவதாரணி ராஜசிங்கம் அவர்களுடன் நேர்காணல்

# நாம் வாக்களிக்காது விட்டால் நாம் மறுப்பவர்கள் நம்மை ஆளும் நிலைக்கு இட்டுச் செல்லும்

எங்கள் மண்ணில் அரசியல்வாதிகள் கலைஞர்களை கவனிப்பது குறைவு. உங்கள் பணியில் ஏதாவது திட்டமுண்டா?

நான் கலைஞர்களை மதிப்பவள், கலையை நேசிப்பவள், கலைவடிவம் ஒன்று மனித உணர்வில் ஏற்படுத்தும் மாற்றத்தையும், வீரியத்தையும் அறிவேன். சினிமாவும், அரசிலும் மக்களை நெருங்கியுள்ளவை. காலங்காலமாகவே அரசியலாளர்களின் சினிமா வரவும், சினிமா ஆளுமைகளின் அரசியல் பிரவேசமும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

அரசியல் சினிமாவின் அவசியத்தை உலகின் பல புரட்சியாளர்களான மார்க்ஸ், லெனின், பிடல்காஸ்ரோ போன்ற புரட்சியாளர்களடன் கிட்லர் போன்றோரும் உணர்ந்தே இருந்தனர்.

"சக்தி வாய்ந்த ஏகாதிபத்திய ஊடகங்களிலிருந்து வரும் கரத்துக்களை மக்கள் ஓரளவுக்கு நம்பவே செய்வர்" என்றிருக்கிறார் பிடல் காஸ்ரோ.

ஆனால் "Making Political Cinema is different from making cinema Polticaly" என்பது மிகச்சரியான கூாகப் பார்க்கிறேன். சினிமா மட்டுமல்ல ஏனைய

> **"அடிப்படைத்தேவைகள் பாராளுமன்றத்தில் அல்ல கிராமமட்டத்திலேயே தீர்க்கப்படக் கூடியவை ஆகவே அவற்றில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தால் பிரச்சனைகள் பல தீர்க்கப்பட்டிருக்கலாம். பாராளுமன்றத்தில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனைகளை அங்கே தீர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிராம, பிரதேச மட்டங்களுக்கெனவும், மாகாணங்களுக்கெனவும் சில சலுகைகள உள்ளன. அவற்றை முறையாக நேர்த்தியாக செய்திருந்தாலே இன்னும் அடிப்படைத் தேவைகள் கூட தீர்க்கப்படவில்லையென மக்கள் கூறமாட்டார்கள்."**

கலைவடிவங்களும் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும். யாழில் சுவர் ஓவியங்கள் தீட்டப்பட்டதும் ஒரு மனநிலையில் இதமான நல்ல எண்ணத்தையே தரும் செயற்பாடு. ஆகவே கலைகள் அதை உருவாக்கும் கலைஞர்கள் முக்கியமானவர்கள். திரைப்பட தயாரிப்பு, cinema எனும் இணையத்தளத்தினூடாக கலைஞர்களின் படைப்புக்களை வெளியிடுதல் மற்றும் சங்சாரி எனும் இணையத்தளம் மூலம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் செயன்முறை என்பனநடைபெற்று வருகின்றன. இவற்றை மேலும் மெருகேற்றி அவர்களுக்கான அங்கீகாரம் கிடைக்க வழிவகுப்பேன்.

இந்திய அரசியல் தலைமை மாற்றத்தில் கலைஞரின் பங்களிப்பைப் போலநமது நாட்டில் முடியுமா?

எல்லா இடங்களிலும் அரசியலில் அந்த சமூகத்தில் வரும் படைப்பின் தாக்கம் இருக்கும். இலங்கையை பொறுத்தலரை விடுதலைப்புலிகள் கூட நிதர்சனம் என்ற அமைப்பின் மூலம் திரைப்படங்கள இயக்கி வந்திருக்கின்றனர். அது மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். தலைமை மாற்றம் என்பது மக்களிடமிருந்தே நிகழ்வது. ஆகவே கலைப்படைப்புக்கள் தமது வெளிப்பாட்டை சரிவர செய்யும்போது மக்களிடம் தெளிவை அல்லது குழப்பத்தை ஏற்படுத்தி மாற்றங்கள் நிகழ்த்த முடியும்.



இளைஞர்கள் தவறிப் போக யார் காரணம்?

இது பொதுவாக ஆராய வேண்டிய விடயம். கல்வி மற்றும் சுற்றுச்சூழலுடன் சில புறக்காரணிகளும் இன்றைய இளைஞர்களை வழிநடத்துகின்றது. கல்வியின் அடித்தளம் முன்பள்ளிகள். அவர்களுக்கும் முன்பாக பெற்றவர் சார் சுற்றத்திலிருந்து தமக்கான சிந்தனைகளை உருவாக்கிக் கொள்கின்றனர் குழந்தைகள். ஆகவே பெற்றோர் தம் பிள்ளைகள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும். இரண்டாவது கல்விச் சமூகம் தமது மாணவர் தொடர்பில் அவர்களின் கல்வியறிவு மற்றும் அவர்களின் தனித்த திறன் வெளிப்பாடு தொடர்பிலும் அவதானம் எடுக்க வேண்டும். இளைஞர்கள் என்பவர்கள் இல்லாத ஒன்றைக் கற்பதில்லை. இருப்பவற்றிலிருந்து எடுத்துக் கொள்கிறார்கள். ஆக்கமான சிந்தனை வழியி அவர்களை முன்னோக்கி நகர்த்தும் போது மறைவழியில் சிந்தனையை செலவிட அவர்களுக்கு நேரம் இருக்காது. ஆகவே அவர்களை முன்னிலைப்படுத்திய திட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

ஈழத்திரைப்படம் வளர என்ன செய்யலாம்?

ஈழம் என்ற சொல்லாடல் சங்க காலத்திலிருந்து பரிணமித்து வந்தது என்றதன் அடிப்படையில் இதற்குப் பதிலளிக்கிறேன். காரணம் முழு இலங்கையையும் உள்ளடக்கிய சினிமா பற்றி அறிந்தவள் நான். ஆகவே முதலில் இந்த வரையறைக்குள் இருந்து வெளி வர வேண்டும். மற்றைய பிரதேச படைப்பாளிகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். எமக்கான தனித்த அடையாளங்களுடன் வெளிவர வேண்டும். இந்திய அல்லது வேறு ஒரு நாட்டு சினிமாவை எடுப்பதற்குத் தான் அவர்களே இருக்கிறார்களே நாம் ஏன் எடுக்க வேண்டும். நமக்கான கற்றலுக்கான தளத்தை உருவாக்க வேண்டும். மக்களை நமது சினிமாவின் பக்கம் திருப்ப நாம் கடினமாய் உழைக்க வேண்டும்.

7 ஆசனம் 320 பேர் போட்டி இவர்கள் இறங்கி வேலை செய்திருந்தால் பல பிரச்சனைகளைத் தீர்த்திருக்கலாம்.?

கேள்வியிலேயே பதில் உள்ளது. ஆம் தீர்த்திருக்கலாம். அரசியலில் இணைந்து சேவை செய்யலாம். ஆனால்· அரசியல் மட்டும் தான் சேவைக்கான களம் என்பது ஏற்பதற்கில்லை. நான்சாதாரணமானவளாக இருக்கும்போதே பல சமூக நலன்சார் நடவடிக்கைகளில் தனித்தும் சமூக நிறுவனங்களுடன் இணைந்தும் ஈடுபட்டு வருகின்றேன். இனியும் எனதுபணி வெற்றி தோல்வியைத் தாண்டி நிச்சயம் தொடரும்.

ஆன்மீகவாதி அரசியலும். அரசியல்வாதி ஆன்மீகவும் பேசுகிறார்கள் இது தான் பின்னடைவுக்கு காரணமா?

அரசியல் உரிமை பொதுவானது யாரும் கத்துக்களைப் பதிவு செய்யலாம். ஆனால் தமது கருத்து சரியானது. உறுதியானது என்பதனை யாரும் கூறமுடியாது. சில கருத்துக்களை தனிப்பட்ட கருத்தாகக் கொண்டு விலக்குதல் சமூகத்திற்கு நல்லது.

வாக்களிப்பின் வீதத்தை அதிகரிக்க நீங்கள் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு செய்வது பற்றி?

வாக்களிப்பது நமது உரிமை. உரிமைக்காக போராடும் நாமே நமக்கான உரிமையை விட்டுக் கொடுத்து விட்டு அதனைப் பற்றி விவாதிப்பது வீணான செயல். வாக்கு எமது உரிமை மட்டுமல்ல பலம். நாம் வாக்களிக்காது விட்டால் நாம் மறுப்பவர்கள் நம்மை ஆளும் நிலைக்கு இட்டுச் செல்லும். தமது கடமையை உணர்ந்து வாக்களிக்க வேண்டும். மக்கள் விழித்துக் கொள்ள வேண்டும்.

அரசியலை சாக்கடை என்பவர் மத்தியில் பூக்கடையாக மாற்ற உங்களது திட்டம்?

சாக்கடை என்று எதை வைத்து சொல்கிறார்கள். அது அரசியலின் செயற்பாடல்ல. அரசியல்வாதியின் செயல்பாட்டை வைத்துக் கொண்டே அதனைக் கூறுகின்றனர். எனவே நான் மக்களால் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றம் சென்றால் நிச்சயம் எனது கடமையை சரிவர செய்வதுடன் எனது வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவேன். ஒவ்வொரும் அதனை நிறைவேற்றும்போது மாற்றம் நிகழும்.

உங்களைப் பற்றிய அறிமுகம் ?

நான் ஒரு சமூக ஆர்வலர், எனது சமூகம் தொடர்பில் நீண்டகாலமாக உற்று நோக்குபவள் அவர்களது வலியை உணர்ந்து என்னாலான உதவிகளை செய்தவள். பல பாடசாலைகள் பல சமூகங்கள் கடந்து வந்தேன். கிட்டத் தட்ட ஆறு பாடசாலைகளில் கற்க வேண்டிய சூழ்நிலைகள் அமைந்தது. நான் ஒரு வர்த்தகத்துறைப் பட்டதாரி, மேலதிகமாக ஊஐஆயு கற்றிருக்கிறேன். வியாபார அப்படையில் பெண்தொழிலதிபராய் வெற்றி பெற்றிருக்கிறேன்.

# சனீஸ்வர மாற்றம் உங்களுக்கு எப்படி?

ஜோதிர்வித்யாரத்னா V.A சிவராசா B.A,B.Phil, Dip.in.Edu

**மேடம்** "பாக்கிய" சனீஸ்வரன் பலவழிகளிலும் நன்மை செய்ய 20/12/2020 வரை ஒன்பதாம் இடத்தில் வீற்றிருப்பார். பயணங்கள் வெற்றியைத் தரும். சிலர் பிதாவைப் பிரிய அல்லது இழந்து போக நேரிடும். அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களினால் பணக்குவியல் ஏற்படும். இழுபட்ட திருமணம் இனிது நிறைவேறும். சில துன்பியல் நாடகங்களையும் எதிர்பார்க்க வேண்டி நேரிடலாம். வாகனவிபத்தில் கவனம் எடுங்கள். பெற்றோரின் நோய் நிலைப்பாடுகளை எண்ணி வருத்தமடைதல். வெளிநாட்டிலிருந்து அவலச் செய்தியொன்று வந்தடையலாம். சிலர் அரசின் செல்லப் பிள்ளையாக அரவணைக்கப்படலாம். "டெங்கு" நோயில் விழிப்பாக இருக்கவும். முன்பள்ளி நிறுவ முயற்சியெடுத்தல், சனீஸ்வரனின் 3/7/10ம் பார்வைகளினால் முன்னேற்றம் ஏற்படும் நிலைப்பாட்டில் தக்க வைக்கப்படுவீர்கள். பங்குத் தொழிலில் ஈடுபடலாம்.

**இடபம்** வருகின்றது அஷ்டமத்துச் சனி 20/12/2020 வரை எட்டில் நின்று ஈடுபடுகின்ற துறைகளில் நற்பலன்களைக் குறைக்க நேரிடும். தெய்வ செயலாக இடபராசிக்கு சனீஸ்வரன் யோக காரகனாக இருப்பதினால் முயற்சிகளுக்கு தகுந்த சன்மானங்களை அள்ளித் தருவார் பிறர் அழைத்தால் மட்டுமே வெளியூர் பயணத்தில் கால் பதியுங்கள். காதுடன் தொடர்பான நோய்களால் வருந்த நேரிடும். பொறுப்பின்றி கொடுத்ததைப் பெறமுடியாத நிலையில் காவல்துறை செல்ல நேரிடும். சட்டத்திற்கு மாறான பொருட்களைக் கொண்டு செல்வதினால் தன்னிடம் கிடைத்தல் காலநிலையின் பாதிப்பினால் விவசாயப் பயிர்கள் பாதிக்கப்படல், விசா கிடைக்காதோர், தாயகம் திரும்பி வருதல், மாமன், மருமகன் உறவில் விரிசல் ஏற்படல், தலையணை மந்திரத்தின் செயற்பாட்டினால் சகோதரர் மத்தியில் விரிசல் ஏற்படல், மங்கள் நிகழ்வுகள் ஏற்படல்.

**மிதுனம்** கண்டகச் சனியாக 7ம் நிலைக்கு 20/12/2020 வரை சனீஸ்வரன் வருகை தந்து உங்கள் செயற்பாட்டில் நன்மைகளை ஏற்படுத்தினாலும் தீமைகளையும் எதிர் பார்த்தே ஆகவேண்டும். பார்வைகள் 3/7/10 என்பன சாதகமாக விளங்கி பாதகமான நிலைப்பாட்டினை குறைவடையச் செய்தல். அன்புக்குரியவர்களை உத்தியோகம், வெளிநாடு காரணமாகப் பிரியும் நிலை தோன்றும். காதலில் சோதனையும், வேதனையும் வந்து விடலாம். கைவிட்டிருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேர்தல், மாற்றுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடல், புதிய இணைப்புக்கள் பொருத்தப்படல், வாகனம் நிப்பாட்ட முன்னர் இறங்க முயற்சிப்பதையும், ஓடிக் கொண்டிருக்கும் வேளையில் ஏறி விடத் தெண்டிப்பதையும் கைவிடுங்கள். பரீட்சைகளில் சாதனை புரிய மாணவர்கள் முயற்சியெடுத்தல், நீர் வழி மூலம் வெளிநாடுகள் போவதைக் கைவிட்டு விடுங்கள். சிறுவர், சிறுமிகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாதல், சகுனங்களில் நம்பிக்கை வைத்து செயற்படுங்கள்.

**கற்கடகம்** சத்துருக்களை வெல்லும் நிலைக்கு சனீஸ்வரன் 20.12.2020 வரை 6ம் கோசரத்தில் நிற்கின்றார். தொல்லை கொடுத்த செயல்கள் நன்மை நிலைக்கு வந்து கொண்டிருக்கும். கைவிட்டவை கை தூக்கி விடப் போகின்றது. குழந்தைப்பேறு உண்டாகும். வெளியூர் பயணம் தாமதம் தடையின்றி நிறைவேறும். வர்த்தக முயற்சிகள் வெளிநாடுகளிலும் விஸ்தரிக்க முயற்சி எடுத்தல் நோய்கள் குணமடைந்து தேகம் இளமை பெயரும்.வாகன யோகங் கிட்ட சகோதரர் உதவி செய்தல், பங்குப் பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்து விடல். "வாஸ்து" சோதிட விதியின் பிரகாரம் புதிய மனை அமைக்க ஆரம்பித்தல். கலைகளில் விளையாட்டுக்களில் விருது பெறல், பிரசுரங்கள் வெளியிட ஆர்வமிருத்தல், விவாகத்திற்கிருந்த தடைகள் நீக்கி விடல்.

**சிங்கம்** ஐந்தில் சனி நச்சுச் சனியாக நெஞ்சில் சனியாக 20/12/2020 வரை அமரப் போகின்றார். பழைய பிரச்சினைகள் பூதாகரமாக தலையெடுக்கும். வீட்டு இரகசியங்களை வெளியில் கசியவிடாதீர்கள். எதிரிகள் தாக்கும் கட்டம் ஏற்படலாம். ஏற்பட்டிருந்த கர்ப்பம் ஏமாற்றத்தைத் தந்து விடலாம். வெளியூர் பயண முயற்சிகள் கொழும்புடன் ஸ்தம்பித்து விடலாம். போக்குவரத்து விதிகளை மீறிச் செயற்பட்டுத் தண்டத்தைச் செலுத்தும் நிலைப்பாடு ஏற்படலாம். வங்கிக் கணக்கில் காணி உறுதியிலும், மோசடிகள் தக்க வைத்தல், மணவிலக்குப் பெறும் நடவடிக்கையில் ஈடுபடல், திசாபுத்தி நன்றாக இருந்தால் மட்டுமே தேர்தலில் நிற்கும் எண்ணத்தில் இருங்கள் இடி மின்னலில் எச்சரிக்கையைக் கடைப்பிடியுங்கள். வானிலை அவதான நிலையம் அறிவிக்கும் வேண்டுகோளை அலட்சியப் படுத்த வேண்டாம். கைப்பேசி மூலம் வருகின்ற காதல் மொழிகளை முளையிலேயே கிள்ளி விடுங்கள், விபத்து ஏற்படலாம்.



ஜோதிட விஞ்ஞானம்

**கன்னி** சனீஸ்வரன் 20.112.2020 வரை நாலில் அமர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கும் வாழ்க்கை வசதிகளில் சோதனைகள், தடைகள், குறுக்கீடுகள், நட்டம், ஏமாற்றம், வேதனைகள் போன்றவற்றைத் தந்து கொண்டிருப்பார். வெளியூர் பய முயற்சிகள் மேற் கொள்ள விடாது பணப் பிரச்சினை முன்னிற்கும். திருமணம் நிறைவேற விடாது சீதனம் போதாமல் இருக்கும் குழந்தைப் பாக்கியமின்றி துக்க சாகரம் மேவி நிற்கும். கடன் பெற்றவர்கள் தலை மறைவாகி விடல். பரீட்சை முடிவுகள் அதிர்ச்சியளிக்கும். பெற்றோர் விரும்பாத இடத்தில் பிள்ளைகள் திருமணம் செய்ய முன்னிற்றல். உதவி செய்ய வெளிக்கிட்டு உபத்திரவத்தில் சிக்கி விடல், ஆவணங்கள் தொலைந்து விடல், தம்பதியர் மத்தியில் பிணக்கும், பிரிவினையும் தாண்டவமாடல், ஜாதகத்தில் தற்போது நடைபெறும் திசா புத்திப் பலன்கள் ஆரோக்கியமாக இருப்பின் தீமைகள் குறைவடைந்து விடும்.

**துலாம்** தைரிய வீரியச் சனியாக 3ம் நிலையில் 20.12.2020 வரை சனீஸ்வரன் நிற்பதினால் பார்வைகள் 03/07/10 என்பன சாதகமாகக் காணப்படுவதினாலும் போடுகின்ற திட்டங்கள் நன்மைப் பலாபலன்களையும், முன்னேற்றத் தையும் ஏற்படுத்தும். துலாத்தில் சனீஸ்வரன் உச்சம் பெறுவது யோகத்தைக் கொண்டு வரும். உடன் பிறப்புக்களுடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கிவிடும். பிள்ளைகளின் அழைப்பின் பிரகாரம் பெற்றோர்கள் வெளிநாடு செல்லும் அதிர்ஷ்டமுண்டாகும். குடும்பத்தில் புதிய ஜீவனின் ஆனந்தக் குரல் கேட்கும். எதிர்பாராத அதிர்ஷ்டம் சுவீப்பினால் ஏற்படும் வாகன யோகங் கிட்ட சகோதரியின் பணஉதவி கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்கால நன்மைக்காக சேமிப்பில் ஈடுபடல், நீண்ட காலத்தின் பின்னர் சொந்த நிலத்தில் கால் பதித்தல், நோய்கள் குணமடையும். விவாகத்திருநாள் ஏற்படல், பட்ட கடன் தீர சொத்தில் ஒரு பகுதியை விற்க நேரிடல், கௌரவப் பதவிகள் கிடைக்க சிபார்சு செய்யப்படல்.

**விருச்சிகம்** ஏழரைச்சனி கடைக்கூறு நடைபெற்று 20/12/2020ல் முடிவடையும். சனீஸ்வரன் வாக்குச் சனியாக 2ம் நிலையில் நின்று இது வரை காலமும் நீங்கள் பட்டுக் கொண்டிருக்கும் கஸ்டங்களினின்றும் விடுதலையும் விமோசனமும் தரப் போகின்றார். பொங்குசனி எனின் இலாபத்தையும், மங்குமரணச் சனி எனின் நோய்கள், நட்டம், அலைச்சல், ஏமாற்றம், நம்பிக்கை கெடுதல், பெண்களால் மானமிழத்தல் என்பவற்றை எதிர்பாருங்கள். சனி விரதம் வழிபாட்டினைக் கைவிட வேண்டாம். மஞ்சட்கோட்டுக் கடவையிலும் ஆபத்து நேரிடலாம். மருத்துவர் சிபாரிசின்றி மருந்து வில்லைகளைப் பாவிக்க வேண்டாம். வீட்டில் பணிவிடை செய்ய நியமித்திருக்கும் வேலைக்காரிகள் களவு நடவடிக்கையில் ஈடுபடுவர். இரவில் காணாக் கடியினால் பாதிப்பு ஏற்படும். திருட்டு மின்சாரத்தினால் தண்டம் ஏற்படல், ஜாதகத்தின் திசாபுத்தி நன்றாக இருப்பின் தேர்தலில் நிற்கலாம். சனீஸ்வரனின் 03/07/10ம் பார்வைகளின் செயற்பாடுகள் நன்மை தரும். பொறுப்பில்லாமல் எவருக்கும் பணம், பொருள் என்பனவற்றைக் கொடுத்து ஏமாற வேண்டாம்.


**தனு** ஏழரைச்சனி ஜென்ம சனியாக 1ம் கோசரத்தில் 20/12.2020 வரை வீற்றிருப்பார். சனி விரதத்தைக் கைவிட வேண்டாம். தாரப் பிரிவு ஏற்படலாம். விசாரணைகள் திருப்திப் படாத படியினால் திருமணத்தைக் கைவிடலாம். சிலருக்கு போதைவஸ்து கடத்தல் காரணமாக தண்டமேற்படல், சனீஸ்வரனின் 3/7/10ம் பார்வைகள் நன்மை தரும் நிலைப்பாட்டில் காணப்படும். பெற்றோரின் நோய் நிலைப்பாட்டில் கவனமெடுக்கவும். வெளிநாட்டுப் பயணம் பிறர் உதவினால் மட்டுமே நன்மையளிக்கும். காதலில் வீசிய சூறாவளி அற்றுப் போய் விடும். போலி ஆபரணங்கள், செல்லாத பண நோட்டுக்கள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும். மின்சாரம் மற்றும் சம்சாரத்தினால் தொல்லைகள் வரலாம்.சிலருக்கு மனை புதுப்பித்தல், புதிதாகக் கட்டும் யோகமுண்டாகும். தொலைபேசி, மின்சாரக் கட்டணங்களின் நிலுவைகள் கூடியமையினால் தொடர்புகள் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல், எவரையும் நம்ப வேண்டாம், சுவீப் பணத்தைக் கொண்டு வரலாம்.

**மகரம்** சனீஸ்வரன் ஏழரைச்சனியாக விரய ஸ்தானத்தில் 20/12/2020 வரை 12ம் நிலைக்கு வருகின்றார். மகரம் சனீஸ்வரனின் ஆட்சி வீடாக இருப்பதினால் கண்ணுக்கு வருந் துன்பம் புருவத்துடன் சென்று விடும். சனீஸ்வர விரதம் வழிபாட்டுடன் ஆஞ்சநேயரையும் வணங்கி வர துன்ப துயரங்களினால் அதிகம் பாதிப்புக்கள் ஏற்படாது. புதிய முயற்சிகள் செய்யவிருப்பின் ஜாதகத்தில் நடப்பு திசாபுத்தி நன்றாக இருப்பதைப் பாருங்கள். கன்னியரால் மானபங்கமும் உங்கள் பணத்திற்கும் கெடுதி ஏற்படலாம். வெளியூர்ப்பயணம் இடைநடுவில் கைவிடக்கூடும். பங்குத் தொழில் கௌரவக்குறைவு முன்னிட்டு கைவிடக் கூடும். இதய சத்திர சிகிச்சை ஏற்படலாம். சிலர் கையூட்டு முன்னிட்டு சட்டத்தின் பிடியில் சிக்க நேரிடும். சனீஸ்வரனின் 3/7/10ம் பார்வைகள் சாதகமான இருப்பதினால் தலைக்கு வரும் கேடு தலைப்பாகையுடன் தப்பி விடலாம். வாகன விபத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். சிறு பிள்ளைகளின் பாதுகாப்பில் கூடிய கவனமெடுக்கவும். சிலருக்கு இரண்டாந்தாரம் ஏற்படலாம். விஷயம் கவனம்.

**கும்பம்** சனீஸ்வரனின் ஆட்சி வீடான கும்பராசியில் இலாபச் சனியாக 11ம் கோசர நிலையில் 20/12/2020 வரை வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பின் படிநன்மைகள் நடந்து உங்களை சமூகம் போற்றும் நிலைக்கு உயர்த்தி வைக்கப் போகின்றார். வசதி உதவி இருப்பின் வெளியூர் பயணத்தைத் தொடரலாம். திருமண முயற்சி கைகூடும். பொறுப்பின்றிக் கொடுத்த பணம் தெய்வசெயலாக கைக்கு வந்து சேரும். இடைத்தங்கல் நாட்டில் உள்ளவர்கள் எண்ணியிருந்த இலக்கினை அடைதல், சகோபதர உதவியினால் வாகன யோகங் கிட்டும். புண்கள் மாறிவிடும். வெளிநாட்டு மணமக்கள் திருமணம் மேற் கொள்ள தாயகம் வருதல், மேலும் ஒரு கிளை நிறுவனம் திறக்க முற்படல், புதியவர் சேர்க்கையை முளையிலே கிள்ளி விடுங்கள். சனீஸ்வரனின் 3/7/10ம் பார்வைகள் நன்மையையும், முன்னேற்றத்தையும் அளிக்கும். பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது நம்பகம் மற்றும் காலாவதித் திகதியையும் பாருங்கள்.

**மீனம்** வருகின்றார் சனீஸ்வரன் பத்தாம் வீட்டிற்கு. செய்தொழிலை உயிரினும்மேலாகப் பாருங்கள், ஜாதகத்தில் தற்போது நடைபெறும் திசாபுத்தி நன்றாக இருப்பின் 20/12/2020 வரை சனீஸ்வரனால் கெடுதல்கள் அதிகம் ஏற்படாது உடையவன் பாராவிட்டால் ஒரு முழம் கட்டையாக இருப்பது போல ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருங்கள். மேலதிகாரிகளுடன் சுமுகமான உறவைப் பேணவும், சிலருக்கு நிச்சம் பதவி பறிபோகலாம் கஷ்டப் பிரதேசத்திற்கு மாற்றம் உண்டாதல், திருட்டுப் பட்டம் சூட்டப்படல், பெண்களுக்கு உதவி செய்ய வெளிக்கிட்டு மானம் மரியாதை பறி போதல், தெய்வ செயலாக சனீஸ்வரனின் 3/7/10ம் பார்வைகள் சாதகமாக இருப்பதினால் கண்ணீர் பன்னீராக மாறிவிடும். உறவினர் பொறுப்பு நிற்பின் வெளியூர் பயணத்தை ஆரம்பிக்கலாம். கால்நடைகள் மற்றும் விலங்குகள் குறுக்கே பாய்வதனால் வாகன விபத்து தக்க வைத்தல், நீதிமன்ற முடிவுகள் இழுபடல், குழந்தைப் பாக்கியம் பெற்றெடுக்க தமிழ் நாட்டு வைத்தியமனைக்குச் செல்ல ஆயத்தமாதல்.

## இல்லம்தோறும் பயிரிடுங்கள்




வீட்டுத்தோட்டத்தை உருவாக்கி நஞ்சற்ற உணவைப் பெற்றுக்கொள்ளுங்கள் வீட்டில் எறியப்படும் கழிவுகள், குப்பைகளைக் கொண்டு பசளைகளை ஆக்கி நோயற்ற சூழலை உருவாக்குங்கள்.

மனமுண்டானால் இடமுண்டு உங்கள் வீட்டிலும் இடமில்லை என சாட்டுக்கூறி சோம்பேறியாகாது சிறிய அளவிலாவது பயிர்களை நட்டு பயனடையுங்கள்.

இதனை முன்னெடுப்பதில் யாழ்களரி முன்னெடுத்த "இல்லம் தோறும் பயிரிவோம்" என்ற முயற்சியால் யாழ் மாவட்டத்தில் பல இல்லங்களிலும் பொது மையங்களிலும் பயிர்கள் பகிர்ந்து பயன் அடைகிறார்கள். அயலவர்களுக்கும் பகிர்ந்து உறவைப் பலமாக்குகிறார்கள். வீட்டுத் தோட்டம் கொரோனா கால சுய முயற்சிகளுடன் குடும்பமாக ஒன்றிணைந்து செயல்பட சுய முயற்சியில் பெற்ற உணவை சமைத்து மகிழ்வது உங்கள் இல்லத்திலும் மகிழ்வை இரட்டிப்பாக்கி சுகதேகியாக இணையுங்கள்

## கொரோனா அலைகள் ஓயவில்லை



"கொரோனா" உலகில் உச்சத்தை தொடுகிறது. எமது நாட்டிலும் கொரேனா அலை ஓயவில்லை. அலட்சியப்படுத்துவதால் ஆபத்தையே எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அர்ப்பணிப்புடன் சுகாதாரப்பகுதியினர் முயன்று வருகிறார்கள். மக்கள் ஒத்துழைத்து வெற்றி கொள்ள முயன்றாலே கொரோனா அலையில் இருந்து தப்பிக்கலாம்.

உணவு பழக்கங்களை மீள்சிந்தனையுடன் பாரம்பரிய உணவு வகைகளைக் கையாளுங்கள்

வீண் வெளியிட பயணங்களைத் தவிர்ப்பதுடன் முகக்கவசம் அணிவதையும், சமூக இடைவெளியையும் காப்பாற்றி உங்கள் சூழலைப் பாதுகாருங்கள்.

## தோல்வியும் வெற்றியே வெற்றியும் தோல்வியே

தேர்தல் முடிவுகள் பலருக்கு ஏமாற்றம், பலருக்கு மகிழ்ச்சி , காரணம் எதிர்பார்த்தவை எட்டப்படாது , எதிர் பாராத முடிவுகள் பல மட்டங்களிலும் குழப்பத்தை ஏற்படுத்தியதுடன் சந்தேகப் பார்வையில் சிக்கித் தவிக்கிறார்கள்.

தோல்வியும் வெற்றி தான் என்பதை தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போனது என பிரதமர் பதவிகள் தலைமைக்கு ஏற்பட்ட சவாலில் தப்பித்ததாக உள்ளதைப் பதவி மாற்றங் கள் வெளிப்படுத்தினார்கள். தினமும் ஒரே நற்சிந்தனை போல மேடைக்கு மேடை புதிய வாக்குறுதி களை கொடுத்ததை நிறைவேற்ற முடியுமா என்பது மக்களே தீர்மானிக்கும் மனதில் கேள்விகளாகக் கேட்டு தீர்மானம் எடுத்தனர். அதி கூடிய வாக்குறுதிகள் தேர்தல் காலங்களில் தான் வெளிவரும். செயல்படுத்துவது இல்லை தானே என்ற விஞ்ஞாபனங்களும், வரவு செலவுத் திட்டங்களும் கண்டு வந்த மக்கள் இப்படிச் சொன்னார்கள் தானே என வழக்கா போட முடியும்? எல்லாம் மக்களை மயங்க வைக்க மேற்கொள்ளும் மேடைப் புழுகுகளே என்பதனை நன்கு அறிந்தவர்கள் வாக்காளர்களே.

சென்ற கால தேர்தல் முடிவுகளில் வாக்குப் பெற்றுத் தோல்வி கண்டவர்கள் கூடப் பலர் பின் கதவாலே வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் நடமாடவில்லையா? அவர்களே உயர்பதவியில் அமர்த்தி வைத்ததும் நல்லாட்சியில் நடந்த நாடகங்கள் தானே?

அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பது எமது நாட்டில் நடைபெறும் நாடாளுமன்ற நிகழ்வுகளே. தேர்தலில் போட்டியிட்டு வென்றவர்கள் எத்தனை பேர் ஒழுங்காக நாடாளுமன்றின் அமர்வுகளில் அமர்ந்தார்கள்? அதிகம் பங்கேற்றார்கள்? அவர்கள் குரல் கொடுப்புக்கள் ஏதாவது நிறைவேற்றப்பட்டனவா? நம்மவர் உரைகள் நம்மவர்களாக காண முடியவில்லையே. வெற்றி மேடைகளை தொலைக்காட்சிகள் வெளிப்படுத்த இவர்கள் எங்கு சென்றார்கள்?

வெற்றியும், தோல்வியாகப் போவது இங்கு வென்றாலும் அங்கு குரல் கேட்கப்படாது தோல்வி கண்ட சம்பவங்கள் சாதிக்க முடியாது போனது ஏன்? பலர் வாக்குகளை அதிகம் பெறுவோம் என வாக்குறுதிகள் கூறி வந்தவர்கள் வாக்குகளைப் பெற முடியாமை அங்கு முகம் கொடுக்க முடியாது தவிக்கும் அரசியல் காய் நகர்வு ஏமாற்றம் கொடுத்தது.

மீண்டும் ஓர் அரங்கில் மோதுவதற்கு ஒரே குழுவில் இருந்து பல பிரிவுகளாக மோதவுள்ளனர். சென்ற காலங்களில் தேர்தல் மக்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் இம்முறை அரிதாகவே காணப்பட்டது. போத்தல் பகிர்வுக்குக் குறைவில்லை, மோதல் குறைந்தது சிறப்புக்களே.

## பேச்சுக்களோ பல்லக்கு தமிழர்களோ கால்நடை தானா?

கொக்கரிப்புக்களும், கோள்மூட்டிகளும், தெருச்சண்டைகளும் ஊரைக்குழப்புவதோடு இதுதானா இவர்களின் நாகரீகம் எண்ட அளவுக்கு எங்களின்ர தெருச்சண்டையள் தேர் தலில நிக்கிறவையளின்ர வார்த்தைப் பிரயோகங்கள கேட்டாதலை சுத்துது அண்ணே எண்ட தில்லையரின் குமுறல் மரத்தடியில் கூடியவர்களின் தலையாட்டல்களும் ஆமோதிப்பதாகவே இருந்தது.

இது எல்லாம் அவையளின்ர பிழையில்ல எங்கட தவறுகள் தான் தம்பி எண்ட விசுவாத்தி ஏழு பதவிக்கு முன்னூற்று முப்பதுபேர் முன்வந்ததும் இந்த பேச்சுகளால் தங்களின்ர தரங்கள வெளிப்படுத்திறவையள தானே எங்கட பிரதிநிதிகளாக தெரியப்போறம் எண்டதும் அவையளின்ர எதிர்பார்ப்புத்தானே என்றார்.

ஏன் இவையள் என்ன செய்யப்போகினம் எண்டு எதையுமே கூறாம மற்றவையளின்ர குப்பையள கொட்டி தாங்கள் எல்லாம் சுத்த வாளியளா காட்டிக்கொள்ளினம் இதைத் தானே அங்க போயும் தங்கட பல்லக்குத்தி நாற்றமடிக்கவா நாடாளுமன்றத்தை எதிர்பார்க்கினம்.

இது தானே முன்னமும் நடந்தது எங்கட மக்களின்ர பிரச்சனையள புரிஞ்சாத்தானே அதைப் பற்றிக் கதைக்க இவையளுக்கு முடியும் எணடு கடலை பெட்டிக்கடை விரிச்ச அன்னத்தின் பேச்சும் சிந்திக்கத் தூண்டியது.

வேற என்ன இவையளிட்ட இருக்கு? எல்லாம் பேச்சுக்களை திசைதிருப்பத்தானே ஐ.நா எண்டும், ஜெனிவா எண்டும் விளங்காமல் பேசி அங்க சென்றாலும் எங்கடயளின்ரை சண்டைக்காட்சியள தானே ரீ.வியில பாக்கிறம் ஏதாவது உருப்படியா செய்தா உருப்படியான துகளை மக்கள் தெரிஞ்சு கொள்ள மக்களிட்ட அரசியல் விழிப்பும் யாரும் கொடுக்க முன்வருவினமே எண்ட சுந்தரலிங்கம் சூடாய் தொடுக்க,

எல்லாம் ஆறு கடக்க மட்டும் தான் அங்காலை போனா நீ யாரோ நான் யாரோ எண்டவையள் தான் பாரு இவையள், என தில்லையின் கொதிப்புக்கும் தன் மகன்மார் வீட்டில படிச்சிட்டு வெத்து வேட்டியளா சுவரொட்டி ஒட்டவும், கொடிபிடிச்சு அலைய அவையளின்ர மூளைச்சலவைக்கு போதையள ஊத்தி விட்டா போதும் எண்ட நிஜத்தைப் போட்டு உடைத்தார்

### கேட்டியளே சங்கதி



- வானம்பாடி -

தில்லையர்.

அது சரி இந்த கொரோனா காலத்திலயும் எல்லாம் தட்டுப்பாடுகள், விலை ஏற்றங்கள், பதுக்கல்களால் மக்களை சுரண்ட எந்த வித தட்டுப்பாடும் இல்லாம கிடைத்த சாமான்கள் எது சொல்லுங்க பார்ப்பம் எண்ட அன்னத்தின் அனுபவம் எல்லோரையும் யோசிக்க வைச்சது.

மஞ்சளை, பெருங்காயத்தை, உள்ளி, மிளகு எல்லாம் காண இல்லை முன்பு அன்னமக்கா எதைச் சொல்கிறாரோ எண்டதை மரத்தடியில இருந்த இளையோரின் செயலே காட்சியானது. கூடிக்கும்மாளம் அடித்து வீதியில் செல்வோரை சீண்டிய இளையோரின் காட்சி விடையானது.

இந்த போதைப்பொருட்கள் தட்டுப்பாடு இல்லாம கிடைச்சுது. எங்கட இளையோரை அழிக்கவே இதற்கான பாதுகாப்பும், விநியோகமும் பலரது ஆசீருடன் நடைபெறுகிறது. இதற்கு இளையோரை பலிக்கடா ஆக்குவதில் பலரது கூட்டு முயற்சிகள் தான் காரணம் என்பதனை யாரும் முன்வைக்கத் தயாரில்லை பாரன், எண்ட விசுவாத்தியின் ஆவேசம் உண்மையை வெளிப்படுத்தியது.

வாத்தியார் விசு சொல்றதில உண்மை இருக்கு இதை இளையோரும் உணர்ந்து செயல்பட வேண்டும். ஐம்பது, இருபது கிராமோடு பிடிபட்டு பின் வியாபாரியாகிறத விட பெரும் தொகையா வினியோகிக்கிற பெருச்சாளியளக் கண்டுபிடிக்கிறதில தான் பாதுகாப்பு உண்டு எண்ட தில்லையின் யோசனைக்கு,

இன்றைய இளையோருக்கு நல்ல சந்தர்ப்பங்கள் கொடுத்தா சாதிச்சுக் காட்டுவார்கள். அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து காட்டாறு போல ஓடும் உணர்வுகளை நெறிப்படுத்தி பொறுப்புள்ளவர் பொறுப்புக்களை உணர்ந்து செயல்பட்டால் மக்களின் தெரிவுகள் பங்கேற்புகளால் மதிப்புடையவர்களாக மதிப்பளிக்கக் கூடியவர்களை உருவாக்கும் நல்ல சமூகத்தை உருவாக்க நல்ல தலைவர்களை தெரிவாக்குவோம் என்ற திட மனதுடன் மரத்தடியில் தீர்மானித்தார்.

# விடுதலைக்குப் போராடும் ஈழத்துத் தமிழ்மக்கள் 12

## நடைமுறை சொல்லும் பாடம் -12

பரமபுத்திரன்

ஆனால் அதன் பின் வந்து குடியேறி வாழும் சிங்கள மக்களின் சொந்தமான நிலம் என்று மணலாற்றினை குறிப்பிடுவது நியாயமானதல்ல என்று சிங்களருக்கே தெரியும். ஆனால் தமிழர் ஆதரிப்பது நகைப்புக்குரியது.

தற்போது நடைமுறையில் நடக்கும் ஆனால் தமிழர்களால் கட்டுப்படுத்தமுடியாத சேதிகளை உதாரணம் காட்டவே இவற்றை இங்கே சொல்லியுள்ளேன். ஊருக்குள் இறங்கி யார் வேண்டுமானாலும் ஆட்சி நடத்தலாம். எங்களின் நிலமும்இ எங்களின் வாழ்வும் எங்களின் முன்னே கைநழுவிப்போகின்றது. கிறித்தவப்பாதிரியார்கள் சைவ கோவில்களுக்காக குரல் கொடுக்கின்றார்கள். விஜயகலா மகேசுவரன் கூறியது தவறு என்று அதற்காக அல்லும் பகலும் யோசித்துஇ கைதுவரை சென்றுவிட்டது. ஆனால் அவரால் வெளிக்காட்டப்பட்டது வெறும் உள்மன வெதும்பலே தவிரஇ திட்டமிட்ட ஒன்றல்ல. அப்பாவி மக்களின் துயரம் தாங்காத மன புழுக்கம் அவரை அப்படி சொல்லவைத்தது எனலாம். ஆனால் ஏன் சொன்னார்? வடபுல மக்கள் அனுபவிக்கும் துயரம் என்ன? அதற்கான மாற்று நடவடிக்கைகள் என்ன? என்று கேட்கவும் ஆளில்லைஇ அதற்கு எந்த நடவடிக்கையும் இல்லை. இருப்பினும் அடிப்பவர்கள் அடிக்கட்டும்இ பெண்களை கெடுப்பவர்கள் கெடுக்கட்டும்இ வாள் கொண்டு வெட்டுபவர்கள் வெட்டட்டும்இ போதை விற்பவர்கள் விற்கட்டும்இ பயந்து ஒடுங்கி வாழ்பவர்கள் வாழட்டும்இ ஆளுக்கள் தங்களின் தனிப்பெருமையை நிறுவட்டும் என்ற நிலையை அங்கு தேக்கி வைத்துவிட்டுஇ புத்தருக்கு விகாரை அமைப்பதிலும்இ சிங்கள மக்களை குடியேற்றுவதிலும் வளர்ச்சி அதிகரித்துள்ளது. தமிழ் அரசியல் கட்சிகளும் தமக்குள் அடித்துக்கொள்கின்றன. இன்னும் சில தமிழ் அரசியல் வாதிகள் நாட்டுக்குள் எல்லாம் செய்து முடித்ததாக எண்ணி வெளி நாடுகளுக்கு சென்று விளக்க கூட்டம் வைக்கின்றார்கள். சில தமிழ் அரசியல்வாதிகளை கொல்வதற்கு திட்டங்கள் தீட்டியுள்ளதாகவும்இ அதனை இலங்கை காவல்துறை கண்டுபிடித்துள்ளதாகவும்இ சர்வதேச உதவியுடன் அவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்கள் எனவும் பத்திரிகைகள் எழுதுகின்றன. இலங்கை வடபுலத்தில் நடக்கும் வாள்வெட்டுக்கள்இ பெண்களின் மீதான தாக்குதல்கள், போதை கடத்தல்கள்இ திருட்டுகள் கண்டுபிடிக்க முடியாதநிலையில் இலங்கை தாண்டிய நிலையில் நடக்கும் திட்டங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. தமிழரின் நிம்மதியான வாழ்வுஇ சொந்த வாழிடம் என்பன உறுதிப்பட முடியாநிலை என்பதுதான் கவலையான சேதி.



இங்கு கவனிக்க வேண்டிய இன்னோர் செய்தி தமிழர் ஒருவர்இ தமிழ் கடந்து, வேறு சிங்கள கட்சியில் இணைந்து பங்காற்றினாலும் தமிழன் தமிழன் தான் என்பதற்கு விஜயகலா மகேசுவரன் ஒரு நல்ல உதாரணம். இதற்கு முன்னும் பல உதாரணங்கள் இருந்துள்ளன என்பதையும் நினைவுபடுத்தமுடியும். அதேவேளை இந்த சேதியை நன்கு விளங்கிக்கொண்டால்தான்இ தமிழ் அரசியவாதிகள் தமிழ் கட்சிகளை வைத்திருந்துஇ தமிழ் என்ற பெயர் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களாகிஇ தொடர்ந்தும் தங்களை தக்க வைக்கின்றார்கள். இப்போது மீண்டும் திருவிழா காலம், அதாவது தேர்தல்காலம் அண்மிக்கின்றது. அரசியல் செய்பவர்கள் தங்களை முன்னிறுத்துவதிலும், மக்கள் சேவகனாக காட்டுவதிலும் முனைந்து நிற்கின்றார்கள். இதே போல இன்னும் பல சேதிகள் உண்டு. இதேவேளை இலங்கைஇ இந்தியா போன்ற நாடுகளில் இந்துக்கோவில்கள் அல்லது இந்துக்களை குறிவைத்து தாக்குவார்கள். அதாவது இந்துக்கள் தவறானவர்கள், சாதி பார்ப்பார்கள், காட்டு மிராண்டிகள், சாமி என்பதே பொய் இப்படி இன்னும் பல. அதேவேளை அவற்றை உண்மையாக்கும் விதத்தில், கோவில் நடத்துனர்களும் நடந்து கொள்வர். என்பதும் ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒன்று. இருந்தாலும் இந்துக்களை குறிவைக்க காரணம் என்ன?. யாரும் கேட்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை மட்டுமல்லஇ துணிவும் கூட.

( தொடரும் )

## என் அப்பப்பா...

மண்ணில் பிறந்தவர்கள் யாவரும் இறந்து தான் ஆக வேண்டும் என்பதனை அறிந்து கொண்டேன். நிழலின் அருமை வெய்யிலில் தான் தெரியும் என்பார்கள். இன்று அப்பப்பாவை என்னால் நினைத்துப் பார்க்கத் தான் முடிகின்றதே தவிர, அவரை நேரில் காண முடியாது.

காலை எழுந்தவுடன் கேட்கும் " GOOD MORNING" என்ற வாழ்த்தொலியும் நின்று விட்டது. அவர் நேரம் தவறாது நேர அட்டவணைப்படி செயற்படுவது போல் அவரது நாளாந்த செயற்பாடு அமைவது போற்றுதற்கரியது. இதனை அவரது வாழ்க்கை முறையிலிருந்து நான் கற்றுக் கொள்ள வேண்டும்.

அவர் நட்டு வைத்த கொய்யா, பப்பாசி, மாதுளை, திராட்சைக்கொடி, வெற்றிலைக்கொடி போன்றவற்றை அவர் பராமரிக்கும் போது, அவற்றை நான் பார்த்திருக்கின்றேன். மரம், செடிகள் வளரும் அழகைப் பார்த்து ரசிப்பார். இவை தனது பேரக்குழந்தைகளுக்கு உதவும் என்பதே அவரது நோக்கம்.

நாளாந்தம் எமது வீட்டிற்கு அருகில் உள்ள சனசமூக நிலையத்திற்கு சென்று பத்திரிகைகள் வாசித்து வரும் போது கையில் ஏதாவது உணவுப்பொருட்கள் வாங்கித் தந்து மகிழ்வார். எனக்கும், தங்கைக்கும் பாரதியார் பாடல்கள், கதைகள், சிறுவர் பாடல்கள் போன்றவற்றைச் சொல்லியும், நற்பழக்கவழக்கங்களையும் கற்றுத் தந்த எம் அருமையான அன்பானவரை இழந்து விட்டோம்.



அவரது கவிதை நூல் வெளியீட்டின் போது நான் தேவராம் பாடியதை அடிக்கடி கூறி மகிழ்ந்து பெருமைப்பட்டிருக்கின்றார். சில எனது செயல்களை அவர் விரும்புவதில்லை. காலில் செருப்பின்றி மண்ணில் இறங்கி விளையாடுதல், நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்த்தல், கேட்ட கேள்விக்குப் பதில் எதுவும் கூறாதிருப்பது மட்டுமல்லாது, அவரது அனுமதியின்றி பொருட்களை எடுத்தல் போன்ற செயல்களாகும்.

ஒரு நாள் அவரது மேசையில் உள்ள காகிதம் மற்றும் எழுதுகருவி போன்றவற்றை எடுக்கும்போது "எடுக்கக் கூடாது காருண்யன் நான் மேலே போன பின்னர் உங்களுக்குத் தான் எல்லாம்" என்பார். அப்போது " நீங்கள் எப்போது மேலே போவீர்கள் ? என்று நான் கேட்பேன். அதற்கு இப்போது தான் அர்த்தம் புரிகிறது.

எனது ஆறு வருடங்களில் அவர் தந்த அனுபவங் களை வார்த்தையினால் கூறவே முடியாது. எனது வாழ்நாளில் அவரை என்றும் மறவேன் என்று கூறி விடை பெறுகின்றேன்.

அமரர் பெருமாளின் பேரன் - செல்வன் நி.காருண்யன் -

( 4ம் பக்கத்தொடர்ச்சி) **கலை வளம் ....**

புதியவர்களை உருவாக்கவும் ஊக்கப்படுத்தி அரங்குகளை பயன்படுத்துவதுடன் மக்களின் மனநெருக்கீடுகளில் இருந்து விடுபடவும் முடியும். புதிய சிந்தனைகளை மாற்றங்களுக்கேற்ற சமூகத்தை வழிகாட்டவும்,ஆரோக்கிய சமூகத்தை மகிழ்ச்சியில் சிறந்த சிந்தனைக்கு தூணாக, வழிகாட்டிகளாக கலைப்பணிகள் மூலம் ஆற்றுப்படுத்தும் கலைஞர்களாக இயங்குவார்கள். இதுவே எமது கலை வளர்ச்சிக்கு அவசிய தேவையுமாகும்.

இன்று 2020ல் கலைஞர்கள் என்ன செய்கிறீர்கள்? எனக் கேட்டால் 60-70 ஆண்டில் அரங்கில் பாராட்டுப் பெற்றேன் என்போரே உள்ளதாக தம்மைப் பெருமைப் படுத்துவதை விட இன்று சிறு சிறு கலைப்பணியால் ஆற்றல் திறன்களைப் பகிர்வோரை இனம் கண்டு கொள்வதன் மூலம் சிறந்த கலைஞர்களாக வெளிப்படுத்தப்பட வேண்டும். அரங்கேறத் தெரியாதவர்கள், இசைக்கருவிகள் எது எனத் தெரியாதவர்கள் எல்லாம் அத்துறை சார்ந்தவர்களாக சிபார்சு செய்து பாராட்டுப் பரிசுகள் பெற வாய்ப்புகள் கொடுப்பதால் தான் கலைத்துறைப் பணிகள் பின்னடைவுக்கு துணைபோவது தான் கலைப் பணி வறட்சி அடையக் காரணமாகிறது. இவை சகல மட்டத்திலும் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். மனிதனை மகிழ்வூட்டக் கூடியது கலை என்றால் அதனால் மனித மனங்களில் சிந்திக்கத் தூண்ட வைப்பதும் கலைஞனின் தூண்டலாக வேண்டும். எமது கலை வளங்களில் இருக்கும் பயன்களை வேறு இறுவட்டு இசைகளால் நிரப்பி விடாதீர்கள்

# இளையோர் களரி

## வடகிழக்கான் தியாகத்தைத் தேடி...

ஞா.யோய் பிரகாஸ்
மட்டக்களப்பு

வடக்கின் வாழ்வை வசந்தம் என்றார்
கிழக்கின் வாழ்வை உதயம் என்றார்
வடகிழக்கு இணைவை பிரி என்றார்
வடக்கை வடக்காகவும்
கிழக்கை கிழக்காகவும் பிரித்து நின்றார்

உன்னதமான வாழ்வைத் தேடி
உயர்ந்த பல தியாகங்கள் செய்து
உரமூட்டிய மனிதர்களை மறந்து
உழலும் மனிதா நீ எங்கே போகின்றாய்?

உரிமை தேடி
உள்ளதையும் இழந்து
உருக்கொடுத்த உறவை மறந்து
உருமாறி உலகில் நீ மறைகின்றாய்

எதற்கும் ஒரு காலமுண்டு
எதிலும் ஒரு சாபமுண்டு
எளிதாய் நீ மடிந்தாலும்
எப்போது நீ உதித்திடுவாய்

வஞ்சனைகள் மேலோங்க
பஞ்சனைகள் பல தேடி
நெஞ்சத்தில் இருந்தவரை
நெஞ்சார மறப்பதேனோ?

**சமூக மாற்றத்திற்கு இளையோர் எப்படிப் பங்களிப்புகள் செய்யலாம்?**

சமூக மாற்றம் எனும் போது எழுச்சி மிகு மாற்றம் மற்றும் தாழ்வான மாற்றம் என வகைப்படுத்தலாம். அந்த வகையில் இளையோர் எழுச்சி மிகு மாற்றத்திற்கே பங்களிப்பு செய்ய முடியும்.

சமூகத்திற்கிடையே உள்ள சங்கங்கள் மூலம் அவற்றுடனான இணைந்து சமூக மாற்றத்தித்திற்கு பங்களிப்புச் செய்யலாம்.

சமூக பெரியோர்களை ஒன்றிணைத்து தவறான வழியில் செல்லும் நபர்களை இனம் கண்டு அவர்களுக்குரிய ஆலோசனைகளை கொடுக்கலாம்.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் எனும் கூற்றுக்கிணங்க இளையோர் நினைத்தால் எதையும் செய்யலாம். அவை நல்ல மாற்றங்களாக அமைக்கலாம். அதற்கான சந்தர்ப்பம் வழங்கி அவர்களை தலைவர்களாக அறிமுகப்படுத்தி வரவேண்டும்.

**இளையோரின் முன்னேற்றத்திற்கு சமூகத்திடம் எதிர்பார்ப்பது என்ன?**

இளைஞர்கள் சிறப்பான விடயம் ஒன்றை முன் மொழிந்து அதனை செயற்படுத்தும்போது சமூகமானது அதனை ஆராய்ந்து அதிலுள்ள குறைநிறைகளை சுட்டிக் காட்டி இளையோரின் முன்னேற்றத்தில் முட்டுக் கட்டையாக இல்லாமல் தோளோடு தோள் கொடுத்து இளையோருக்கு முன்னேற்றப் பாதைக்கு சமூகம் உதவ வேண்டும்.

தி.கீர்த்திகன், அம்மன்நகர். மூதூர்.

**இளையோர் முன்னேற்றத்திற்கு சமூகம் எப்படிப் பங்கேற்கலாம்?**

சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களை ஏற்றுக் கொண்டு அதன் வேகத்திற்கேற்றாற் போல இளையோரின் செயற்பாடுகள் சிறப்பாக இடம் பெற வேண்டும்.

இளையோரின் தேவைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்ற வகையில் நல்லது கெட்டதை அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதன் மூலமாக இளையோரின் சக்தியை நற்பாதையில், நன்மையின் வழியில் சென்று வெற்றி பெற சமூகம் ஊக்கமூட்டி உதவ வேண்டும்.

கே.நிலக்சன்

**இளையோரின் முன்னேற்றத்திற்கு சமூகத்திடம் எதிர்பார்ப்பது என்ன?**

இளைஞரை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் இளையோர் ஒன்றுகூடல், உடல் பொதுச்சேவையில் இணைதல், செயற்படல்

சமூக சேவைகளில் ஒன்றிணைந்து ஈடுபடல், செயல்களால் வழிகாட்டல், கிராமத்திற்கு பாதுகாப்புத் தூண்கள் போன்று செயற்படல்

மோ.தினுஷன், திருமலை.

**சமூக மாற்றத்தில் இளையோர் எப்படிப் பங்களிப்புக்கள் செய்யலாம்?**

சமூகத்துக்கு எவராயின் உதவும் போது அவர்களுடன் சேர்ந்து சேவை செய்வதன் மூலம்

**இளையோரின் முன்னேற்றத்திற்கு சமூகத்திடம் எதிர்பார்ப்பது என்ன?**

படிப்புக்கு ஏற்ற வேலை
சக இளையோரின் ஒற்றுமை

ஐ.விதுஷன், திருமலை.

**சமூக மாற்றத்திற்கு இளையோர் எப்படிப் பங்கேற்கலாம்?**

சமுதாய, பாரம்பரிய நடைமுறைகளைப் பின்பற்றிவரும் சிறுவர் இளையோர்களை தற்காலத்தில் எமது சமுதாய நிலைமைகளைத் தெளிவு படுத்தி அனைவரும் இணைந்து ஒன்றுபட்ட சமூகமாக இன, மத வேறுபாடின்றி செயற்பட வேண்டும். அனைவரையும் இணைத்துக் கொண்டு சமூகத்தினை ஓர் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வழிவகுக்கலாம்.

பல விழிப்புணர்வு நிகழ்வுகள்

போதைப்பொருள் பாவனை தவிர்ப்பு, மலேரியா, டெங்கு நோய் பற்றிய கருத்தரங்குகள்

சிரமதானம் போன்ற நிகழ்வுகள்
இளையோர் தலைமைத்துவம்
இளையோருக்கான நல்வழிகாட்டல் கருத்தரங்குகள்
இளைஞர் யுவதி ஒன்றுகூடல்
இளையோரின் செயற்பாட்டிற்கு கை கொடுத்து ஊக்குவிக்க வேண்டும்.

ப.செல்டன், நாவாந்துறை.

**சமூக மாற்றத்திற்கு இளையோர் எப்படிப் பங்கேற்றல்**

எமது சமூகத்தில் இளையோரின் பங்களிப்பு என்பது முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது. சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்சனைகளை இளையார் தாமாகவே முன் வந்து அந்தப் பிரச்சனைகளை நல்ல முறையில் தீர்த்து வைத்தல்
சமூகத்தில் நடைபெறுகின்ற கருத்தமர்வு, விழிப்பூட்டல் போன்ற நிகழ்வுகளில் இளையோர் பங்கேற்றல்
இளையோர் சமூகத்தில் விழிப்புணர்வுடன் செயற்பட்டால் எமது சமூகம் முன்னேற்றமடைந்த ஒரு ஒன்றுபட்ட ஒற்றுமையான சமூகமாக மிளிரும்

இளையோருக்கான கருத்தமர்வு விழிப்பூட்டல் போன்றவற்றில் பங்கேற்றல், சமூகத்தில் ஏற்படுகின்ற நிகழ்வுகளில் முன்னின்று முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.
இளையோரின் தேவை அறிந்து வேலை வாய்ப்பையும் பயிற்சிகளையும் வழங்குதல்
சமூகத் தலைவர்கள், பெரியோர்கள், விழிப்புணர்வுடன் முன்வழிகாட்டிகளாக இளையோருக்கு இருத்தல் வேண்டும்.

கா.கிறிஸ்ரீனாமீரா

**சமூக மாற்றத்திற்கு இளையோர் எப்படிப் பங்கேற்றல்**

இளையோரே சமூகமாற்றம் முதலில் உங்கள் மனதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். நீங்கள் ஒரு செயலில் ஈடுபடும்போது அதன் பின் விளைவுகளைப் பற்றிச் சிந்தியுங்கள். உங்களைப் பிறர் தேவைகளுக்குப் பயன்படுத்தும்போது அவர்கள் நோக்கத்தை அறியுங்கள். உங்களின் இத்தெளிவு நல்லதொரு சமூக மாற்றத்திற்கு வழி அமைக்கும்.

நாம் இளையோரின் எண்ணக்கருவைப் புரிந்து கொள்வதுடன் காலநிலை மாற்றத்திற்கேற்ப வழிகாட்ட முற்பட வேண்டும். இவ் அணுகுமுறையானது நிதானத்துடன் பக்குவமாய் கையாளப்பட வேண்டும்.

மூ.வாமநாதன், புதுநகர்.

## சுற்றுப்புறச்சூழல்

ஜெ.ஜெறின், H.F.C

நாம் நலமாக, நோயின்றி வாழ்வதற்கு சுற்றுப்புறச்சூழலும் பங்காற்றுகின்றது. இன்றைய காலகட்டத்தில் நாம் வாழ்வது நமக்கு மட்டுமல்ல பிறரது வாழ்க்கைக்கும் உதவுகின்றது. சுற்றுப்புறச்சூழல் என்பது எமது வீட்டிற்கு அருகிலுள்ள வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள், மரங்கள், வாய்க்கால்கள் என எல்லாவற்றையும் உள்ளடக்கியது தான் சுற்றுப்புறச்சூழல் ஆகும்.

நாம் வாழும் சூழல் இன்று பல வழிகளினும் அழுக்காகின்றது. இதனால் எமது சுத்தமும், சுகாதாரமும் கெட்டுப்போகின்றது. " சுத்தம் சுகம் தரும்" எனவே எமது சுழலைப் பாதுகாப்பதும், எம் சுத்தத்தைப் பேணவேண்டியதும் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

எமது சூழலானது விஞ்ஞான, கைத்தொழில் வளர்ச்சியாலும், பாரிய இயந்திரங்களைக் கொண்ட தொழிற்சாலைக் கழிவுகளாலும் அழுக்காகிறது. மேலும் புகைகள், வாயுக்கள், தூசிகள், அணுஆயதங்களின் பாவனைகளாலும் அழுக்காகின்றது. இதனால் நாம் சுவாசிக்கும் வழி அசுத்தமடைகிறது. ஓசோன் படையில் கூட துவாரங்கள் ஏற்படுகின்றது.

"உன்னை நீயே திருத்திக் கொள் உலகம் தானாகவே திருந்தும்" என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கிணங்க முதலில் நாம் ஒவ்வொருவரும் எம்மையும், எம் இல்லத்தையும் எமது சுற்றாடலையும் சுத்தமாகப் பேணப் பழகிக் கொள்ள வேுண்டும். இதனால் எமது நாடு முழுவதும் சுத்தமாக இருக்கும்.

வீதிகளில் குப்பைகளையும் தேவையற்ற கடதாசிகளையும் வீசுதல் போன்றவற்றையும் தவிர்க்க வேண்டும். இதனை சிறுவயதிலிருந்தே பழகிக் கொள்ள வேண்டும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" அல்லவா? மேலும் தொழிற்சாலைக்கழிவுகள் ஆறுகளிலும், கடல்களிலும் கலக்காது இருக்க ஆவன செய்ய வேண்டும்.அணுஆயுதப் பாவனையால் ஏற்படுமத் அழிவுகளையும், நீண்ட காலப் பாதிப்புக்களையும் மக்கள் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

சூழல் என்பது எமது வளம். எமது இயற்கை வளங்கள் பேணப்பட்டுள்ள இடம் எமது சூழலிலேயாகும். காடழிப்பதினால் மழையின்மை, மண்ணரிப்பு, வறட்சி, கடும் வெப்பமட் எனம் தாக்கங்கள் ஏற்படுவதுடன் வன விலங்குகளும் அழிந்து விடுகின்றன. எனவே சூழல் இயற்கை எமக்களித்த செல்வம். அதையழியாது பாதுகாக்க வேண்டியது மனிதர்களாகிய எம் அனைவரதும் கடமையாகும்.

**19.07.2020 இளையோருக்கான நல்லிணக்க பயிற்சிப் பாசறை கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் சாட்டியில் நடாத்தப்பட்டது. கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குனர் அருட்தந்தை யூஜின் அடிகளார் தலைமையில் நடைபெற்ற மேற்படி பாசறைக்கு இலங்கை பல்சமயக் கருத்தாடல் நிலைய வளவாளர் யோ.ஜெஸ்ரின் அவர்களால் ஆற்றுப்படுத்தல் சார் பயிற்சிகளை 35 இளையோர் மற்றும் யுவதிகளுக்கு வழங்கப்பட்டது.**



# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்




வடமாகாண வெங்காயமும் அரசியல்வாதிகளும் மேடையில் உணர்ச்சிபூர்வமாகப் பேசிவாக்குறுதிகள் வழங்கி நாடாளுமன்றம் சென்று,காலத்தைவீணடித்து,மக்களை இன்னமும் துன்பத்தில் வைத்திருக்கும் நம் அரசியல்வாதிகளைப் பற்றிகொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!

எமதுதமிழ் மக்களின் சகலபிரச்சினைகளுக்கும் சர்வதேசநாடுகளிடமிருந்தும் ஜெனீவாவுக்குச் சென்றுதீர்வுகாணுவோம் என்று கூறும் எமதுதமிழ் அரசியல்வாதிகள் ஏன் இலங்கைநாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவேண்டும்? நீங்கள் அவர்களுக்குவழங்கவேண்டியதுநாடாளுமன்றம் செல்லவாக்குகள் அல்ல,சர்வதேசம் செல்லவேண்டியவிசாஅனுமதியும் விமானப் பயணச் சீட்டுமாத்திரமே.

கிணற்றில் தொலைத்ததைசமுத்திரத்தில் தேடும் எமதுஅரசியல்வாதிகளின் 70 ஆண்டுகாலதீர்வுவாக்குறுதிகளைநீங்கள் நம்புகிறீர்களா?கட்சிக்குள் குழு அமைக்கும் மத்தியகுழு,செயற்குழுஎன்றுசகலசெயற்பாடுகளுக்கும் குழு அமைத்தவர்கள் மக்கள் பிரச்சினைகளைதீர்க்க குழு அமைத்தார்களா?20 ஆண்டுகளாக இருக்கும் அரசியல்வாதிக்குசம்பாதிக்கபணத்தையும் தேடியசொத்துக்களையும் பாதுகாப்பதற்குமக்கள் ஆணைதேவைப்படுகிறது. உங்கள் வாக்குகளைஅவர்களுக்குஅளித்தால் தங்களுடையசொத்துக்களைமேலும் பன்மடங்காக்கி,உங்களைஅடக்கிஆள்வார்கள். இதற்காகவாநீங்கள் வாக்களிக்கப்போகிறீர்கள்?

எம் தமிழ்மக்களின்சொத்தைஆக்கிரமித்துஅபகரித்தஅரசியல்வாதிகள் உங்கள் சொத்துக்களைமீட்டுத் தருவார்கள் என்று இன்னமும் நம்புகிறீர்களா?

விடுதலைப் போராளிகளுக்கு தண்டனை வழங்கிய நீதியரசர் தற்போது அவர்களைப் போற்றி தலையில் தூக்கிவைத்து கொண்டாடும் நாடகம் உங்களுக்குப் புரிகிறதா? வீணாகப் போகின்ற இரணைமடுத் தண்ணீரை வடபகுதி மக்கள் குடிப்பதற்கு விநியோகிப்பதை தடைசெய்த அரசியல்வாதியை மறக்கமாட்டோம்! மன்னிக்கவும் மாட்டோம்!

சாதாரணஅரசஉத்தியோகத்தராக இருந்தநாடாளுமன்றஉறுப்பினர்கள் மாடமாளிகைகளுக்கும்,ஏக்கர் கணக்கானகாணிகளுக்கும் பலகோடிரூபாய் சொத்துக்களுக்கும் சொந்தக்காரர்களாகியதுஎப்படி?

புலி வேடம் பூண்டு,புலியாய் பேசிநாடாளுமன்றம் சென்றவர்கள் வாய் கட்டியபூனைகள் போல் நாடாளுமன்றத்தில் நரித்தந்திரத்தைதங்கள் தேவைக்குபயன்படுத்திமீண்டும் 60 மாதத்தில் வருவார்கள். நீங்களும் வயிற்றைக்கட்டிஉங்கள் குழந்தைகளையும் பாதாளத்துக்குள் தள்ளப்போகிறீர்களா?

தங்கள் பாதுகாப்புக்குபெரும்பான்மை இனப் பாதுகாப்புப் படையினரைவைத்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் முதலில் அதனைஅகற்றுங்கள். அதன்பின்னர் படையினரைவெளியேற்றுவதற்கானகோரிக்கையைமுன்வையுங்கள்!

யாழ்ப்பாணத்துவெங்காயம் காரமானது. நமது அரசியல்வாதிகள் வாய்ச்சொல்லில் காரமானவர்கள். வாக்குறுதிகளை அள்ளி வீசி வாக்கு வேட்டைசெய்து, நாடாளுமன்றம் சென்று, ஐந்தாண்டுகளின் பின் சாதித்தவைகளை திரும்பிப் பார்த்தால் உரித்தவெங்காயம் போல் ஒன்றுமே இருக்காது. உரித்தவர்களுக்குகண்ணீர் மாத்திரமே மிஞ்சியது1முதலில் கைசின்னத்திற்கும் உங்கள் மூன்றுவிருப்புவாக்குகளில் ஒன்றைஅங்கஜன் இராமநாதன் அவர்களின் இலக்கம் 1 இற்கும் எனதுவெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்துமற்றைய மூன்றாவதுவிருப்புவாக்கைஎமது கை சின்னத்தில் போட்டி இடும் நீங்கள் விரும்பியவருக்குஅளித்துஉங்கள் வெற்றியைநிலைநாட்டுங்கள்!

**ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொண்டு அதேசமயம் வடமாகாணத்தில் பாரிய அபிவிருத்தியை மேற்கொள்வதன் மூலம், வேலையில்லாப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவோம் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை.**


*"உங்கள் வாக்குஉங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!"*


*தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.*










இப்பத்திரிக்கை யாழ்களரி நிறுவனத்தால் சுன்னாகம் கே.கே.எஸ் வீதியிலுள்ள முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத்தில் 01.07.2020 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது.